Registered as a Newspaper

கெயின்ஸ்
நெல்லியடி.
A/L 88/89 AUGUST
கலை, வர்த்தகம்
ஆரம்பம்: 2-4-87
A/L 87 Aug:
மீட்டல் வகுப்புகள்
நடைபெறுகின்றன.
(1161)

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
விலை:
ரூ. 1-25

G. A, Q - 88
APRIL
ஆரம்பமாகிவிட்டன
விண்ணப்பங்கள் 9-4-87
வரை
ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்பு-
கெயின்ஸ்
நெல்லியடி.
(1161)

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ௵ பங்குனி மீ 22 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபா பிறை 05 (05.04 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 110

● பருத்தித்துறை ● வல்வை ● பலாலி ● வயாவிளான்

4 முகாம்களிலிருந்து ஒரேநேரம் வெளியேற இராணுவம் முயற்சி

புலிகள் கடுமையாகத் தாக்கி முறியடித்தனர்

— வல்வை, அச்சுவேலிச் செய்தியாளர்கள் —

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, பலாலி, வயாவிளான் ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து இராணுவத்தினர் ஒரே சமயத்தில் வெளியேற எடுத்த முயற்சிகள் நேற்று முறியடிக்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய கடும் எதிர்த் தாக்குதல்களைத் தொடர்ந்து, இராணுவத்தினர் முகாம்களுக்குத் திரும்பினர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் மூன்று சிறுவேகப் படகுகள் சகிதம் வந்த இரண்டு பெரிய கடற்படைக் கப்பல்களில் இருந்து பருத்தித்துறை முகாமுக்கு ஆயுதங்கள் இறக்க முயற்சிக்கப்பட்டது.

இதை எதிர்த்து தமிழீழ விடுதலைப் புலிகள் உக்கிரமாகத் தாக்குதல்களை நடத்தினர்.

அப்போது இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதலும் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதலும் ஹெலித்தாக்குதலும் குடியிருப்புப்பகுதிகளை நோக்கிப் பயங்கரமாக நடத்தப்பட்டன.

வெளியேவர முயற்சி

அதேவேளை இராணுவ முகாமில் இருந்து மூன்று வழிகளாலும் இராணுவம் வெளியேற முயற்சித்தது.

அந்தமுயற்சியை விடுதலைப்புலிகள் நவீன ஆயுதங்களைக்கொண்டு முறியடித்தனர். இதைத் தொடர்ந்து இராணுவம் முகாமுக்குத் திரும்பியது.

இதன்பின்னர் முகாமில் இருந்து இராணுவம்

(4ஆம் பக்கம் பார்க்க)

தந்தை - மகன் ஷெல்லினால் காயம்

வல்வெட்டித்துறை ஏப் 5

கடந்த வெள்ளி நள்ளிரவு தொண்டமனாறு இராணுவ முகாமில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் தந்தையும் மகனும் காயம் அடைந்தனர்.

கம்பர்மலை என்னுமிடத்தில் சபாபதி குணரத்தினம் என்பவரின் வீட்டு முற்றத்தில் ஒரு ஷெல் விழுந்து வெடித்தது.

34 வயதான ச. குணரத்தினமும் அவரின் ஐந்து வயது மகன் குகநேசனும் படுகாயமடைந்தனர்.

இருவரும் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இடையிடையே துப்பாக்கிச் சூடு ஷெல்லடி

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 5

நேற்றுக் காலை முதல் மாலை வரை யாழ் பஸ் நிலையப் பகுதியை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களும் கடற்கரை, கொட்டடி பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்

வல்வெட்டித்துறை ஏப் 5

கெருடாவில், கொம்பந்தறை, வல்வைப் பகுதிகளில் மக்கள் வாழும் இடங்களை நோக்கிக் கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இது பற்றிய விவரம் வருமாறு:-

நேற்றுக் காலை பத்து மணியளவில் இரண்டு சாதாரண வேகப்படகுகள் சகிதம் மூன்று பெரும் கடற்படைக் கப்பல்கள் காங்கேசன் துறையில் இருந்த வல்வை இராணுவ முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

கெருடாவில், கொம்பந்தறை, வல்வை பகுதிகளில் மக்கள் வாழும் குடியிருப்புக்களை நோக்கி பீரங்கிப் பிரயோகம் மேற்கொண்டபடியே இக்கப்பல்கள் சென்று கொண்டிருந்தன.

இதனைத் தடுத்து நிறுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் கப்பல்களை நோக்கி எதிர்த் தாக்குதலை நடத்தினர்.

புலிகளின் ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து கடற்படைக் கப்பல்கள் நிலை குலைந்து மேல் கடலுக்குச் சென்றன.

இதன் பின்னர் வல்வை இராணுவ முகாமில் இருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அளவெட்டியில் விழுந்த ஷெல்கள்

காங்கேசன்துறை, ஏப். 5

பலாலியிலிருந்து மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி வெள்ளி இரவு 10.45 மணி அளவில் ஏவப்பட்ட ஷெல்களில் இரண்டு அளவெட்டியில் வெட்டிச் சோலை என்னும் இடத்தில் வீழ்ந்து நிலத்தில் புதையுண்டன.

தாமோதரம் பிள்ளை விசுவலிங்கம் என்னும் விவசாயியின் புகையிலைத் தோட்டத்தினுள் ஒன்றும், நாகமுத்து சண்முகசுந்தரம் என்னும் விவசாயியின் மிளகாய்த் தோட்டத்தினுள் மற்றொன்றும் விழுந்து புதைந்தன.

பலத்த சிரமத்தின் மத்தியில் சுமார் ஆறு அடி ஆழத்துக்கு குழி தோண்டி இந்த ஷெல்கள் மீட்கப்பட்டது

(இ - 68)

கெருடாவில், வல்வையில்

தாய், மகள் உட்பட மூவர் மரணம்

ஷெல், பீரங்கித் தாக்குதல்

வல்வெட்டித்துறை, ஏப்ரல் 5

வல்வையில் நேற்றுக் காலை இராணுவம், கடற்படை ஆகியவை நடத்திய ஷெல், பீரங்கித் தாக்குதலில் மூன்று பொதுமக்கள் உயிரிழந்தனர்.

இவர்களில் இரண்டு பேர் எட்டுவயதுச் சிறுமிகள். ஒருவர் 28 வயது இளம்பெண் இவர்களில் தாயும் மகளும் அடங்குகின்றனர்.

இத்தாக்குதல்களில் பலர் காயமடைந்தனர்.

விவரம் வருமாறு:

வல்வை ராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒரு ஷெல் கெருடாவில் என்னுமிடத்தில் எஸ். ரஞ்சன் என்பவரின் வீட்டின் முன் விழுந்து வெடித்தது.

ரஞ்சன் என்பவரின் 8 வயது மகள் சுவாகினி அந்த இடத்தில் உடல் சிதறி உயிரிழந்தார்.

சுவாகினியின் தாயாரான 28 வயதான சாந்தாராணி மிகவும் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது இடைவழியில் உயிரிழந்தார்.

முதலில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு இவர் எடுத்துச் செல்லப்பட்டார். பின்னர் தனியார் வான்மூலம் யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்ட சமயமே மரணம் சம்பவித்தது.

பீரங்கித் தாக்குதல்

கடற்படையினரின் பீரங்கித் தாக்குதலில் வல்வையைச் சேர்ந்த 8 வயதான வேலுப்பிள்ளை பானுமதி உயிரிழந்தாள்.

குடல் வெளியேறிய நிலையில் இச்சிறுமியை வல்வை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் மகளிர் பிரிவின் இந்திராணி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர் அப்போது இடைவழியில் சிறுமி மரணமானார்.

இத்தாக்குதலின் போது காயமடைந்த பருத்தித்துறை, மந்திகை ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

அவசர ஆலோசனைக்காக

இலங்கைத்தூதர் கொழும்புக்கு அழைப்பு

கொழும்பு, ஏப் 5

அவசர ஆலோசனைகளுக்காக புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் திரு. பெர்னாட் திலகரத்தினாவை கொழும்பு அரசு அழைத்துள்ளது.

இலங்கையில் இந்தியத் தூதர் திரு டிக்ஸித் திருமதி ஸிறிமா சந்திப்பு 45 நிமிடங்கள் வரை நீடித்ததாகத் தெரிகிறது.

இச்சந்திப்பின் போது சுதந்திரக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. சோமசார தலநாயக்கா மட்டுமே திருமதி பண்டாரநாயக்காவுடன் கலந்து கொண்டார்.

ஜனாதிபதி சுதந்திரக் கட்சித் தலைவி ஆகியோருடன் இந்தியத் தூதர் நடத்திய சந்திப்புக்கள் பற்றி இருசாரப்பினரும் தீவிர மௌனம் சாதித்து வருகின்றனர். (இ-எ)

முச்சந்தி முனி



சண்டை பிடிக்கிறேன் என்டு கங்கணம் கட்டி நிக்கிறவை, எந்த அமைதிக் குழுவைத் தான் இஞ்சை வர விடுவினம்...?

● யாழ்நகரில்

திடீர் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 5

யாழ்-நகரில் நேற்று இரவு திடீர் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரவு 8 50 மணி அளவில் கோட்டை முகாமில் இருந்து பத்துக்கும் மேற்பட்ட ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன.

இதன் காரணமாக ஆஸ்பத்திரி நோயாளர்கள், ஊழியர்கள் பெரிதும் பதற்றமடைந்த நிலையில் "கொங்கிறீட்" கட்டடங்களுக்கு கீழ் சென்று படுத்துக்கொண்டனர் யாழ் ரயில் நிலையத்திலும் ஏராளமானோர் தங்கி இருந்தனர்.

ஷெல் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றி இச் செய்தி எழுதும் வரை ஏதும் தெரியவில்லை. (இ-10)

கண்ணி வெடியில் 3 சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

மட்டக்களப்பு மாவட்டத்தில் புணானை என்ற இடத்தில் நேற்று ரோந்து சென்ற சிப்பாய்கள் மீது போராளிகள் கண்ணி வெடித் தாக்குதல் நடத்தியதில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

சிப்பாய்கள் பயணம் செய்த வாகனமும் பலத்த சேதமடைந்ததாக தெரியவருகிறது.

போராளிகளின் தாக்குதலை அடுத்து நிலை குலைந்த சிப்பாய்கள் பொதுமக்களை நோக்கியும் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டனர்.

இதன் காரணமாக பலர் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது (இ-10)

வயாவிளானில் இளம் பெண்மீது சூடு!

யாழ்ப்பாணம்,ஏப் 5

இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயந்து இரவில் மடம் ஒன்றில் படுத்து விட்டு நேற்றுக் காலை வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்கள் மீது மறைந்திருந்த சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம்மேற் கொண்டனர்.

இதனால் இளம் பெண் ஒருவர் சிப்பாய்களின் சூட்டுக்கு இலக்கானார்.

நேற்றுக் காலை வயாவிளான் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

திக்கைநாதன் ஜெயவதனி (16 வயது) என்ற இளம் பெண்ணே காயமடைந்தவராவார்.

(இ-10)

இலங்கை இனப்பிரச்சினையில்

இந்தியா சுயேச்சையாக செயற்படவேண்டும்

ராஜீவுக்கு அமிர் கடிதம்

சென்னை,ஏப்ரல் 5

இலங்கை இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர இந்தியா சுயேச்சையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பிரதமர் ராஜீவ்காந்திக்கு, இப்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார்.

பிரதமர் காந்திக்கு திரு. அமிர்தலிங்கம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

கடிதத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் எழுதியிருப்பதாவது:-

டிசம்பர் 19 யோசனைகளைச் சமர்ப்பித்தபின்னர் இலங்கையில் 700க்கு அதிகமான அப்பாவித் தமிழர் கொல்லப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான தமிழர் நிர்க்கதியாக்கப்பட்டு விட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

சர்வதேச அமைதிக் குழுவை இலங்கைக்கு உடன் அனுப்ப

கோரிக்கை

* இலங்கை அரசுப் படைகளால் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் வடக்கு, கிழக்குத் தமிழர்களை படுகொலையில் இருந்து காப்பாற்ற சர்வதேச அமைதி காக்கும் படை ஒன்று இலங்கைக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

* இலங்கைச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டு இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு விரைவில் சென்று பார்வையிட வேண்டும்.

தமிழர் இனப் படுகொலை செய்யப்படுவதை நிறுத்தும் சர்வதேசக் கமிட்டி முன்கண்ட கோரிக்கைகளை விடுத்துள்ளது.

நோர்வே, சுவீடன், சுவிட்சர்லாந்து, மொரிஷியஸ் ஆகிய நாடுகளுக்கு இவ்வேண்டுகோள் அடங்கிய மகஜரை சர்வதேசக் கமிட்டி அனுப்பிவைத்துள்ளது.

இனப் பிரச்சினைக்கு அமைதித் தீர்வு ஒன்றைக் காண இந்தியா

(4-ஆம் பக்கம் பார்க்க)

ஆனந்த விகடன் ஆசிரியர் கைது!

சென்னை,ஏப்ரல் 5

தமிழக சட்டசபையின் தீர்ப்புக்கு இணங்க ஆனந்த விகடன் ஆசிரியர் திரு. வா. பாலசுப்பிரமணியம் நேற்று மாலை அவரின் வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் சென்னை மத்திய சிறைக்குக் கொண்டு போகப்பட்டார்.

(முன்வந்த செய்தி 4ஆம் பக்கத்தில்) (இ-எ)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு பிரசித்தம்:

இந்து நாளிதழுக்கு சிறப்பு விருது!

சென்னை, ஏப். 4

இலங்கைத் தமிழரின் அவல நிலையை உலகுக்கு சரிவர எடுத்துக் காட்டி வருவதற்காக 'இந்து' நாளிதழுக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது.

தமிழ் நாடு 'தினமலர்' தமிழ் நாளிதழ் ஸ்தாபகர் ரி. வி. ராமசுப்ப ஐயரின் நினைவாக இவ்விருது வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டின் மக்கள் படும் கஷ்டங்களை அரசின் கவனத்துக்குக் கொண்டுவருவதில் ஆற்றிய பணிக்காக 'கல்கி' வார இதழுக்கும் விருது வழங்கப்பட்டது.

நடுவர் குழுத் தலைவராகப் பணியாற்றிய சென்னை மேல் நீதிமன்ற நீதிபதி திரு எஸ். மோகன் தலைமை வகித்துப் பேசுகையில், இலங்கைத் தமிழர் அவல நிலையைப் போக்கும் முயற்சியில் அயராது உழைப்பதற்காக 'இந்து'

(4 ஆம் பக்கம் பார்க்க)

பௌத்த குருமார் விஜயம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

இன்று யாழ்ப்பாணம் வரஇருந்த பௌத்தகுருமார்களது விஜயம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது நெருக்கடிநிலை ஏற்பட்டிருப்பதாகக்காரணங்காட்டி அரசாங்கம் அவர்களுக்கு அனுமதி வழங்கவில்லையெனத் தெரியவருகிறது.

பண்ணைப் பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட சிப்பாய்களை விடுவிப்பது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த இவர்கள் இங்கு வரஇருந்தனர்.

இவர்களது விஜயம் தடைப்பட்ட போதிலும் வவுனியாப் பௌத்தகுரு யாழ்ப்பாணம் வருவதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. (இ-10)

இன்று இறுதி நாள்

வடக்கின் மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரரைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பின் கடைசித்தினம் இன்றாகும்,

நீங்கள் பதிவு செய்த வாக்குகளை இன்று மாலை 5.00 மணிக்கு முன் உதயன் காரியாலயத்திலோ அன்றி நாம் முன்னர் குறிப்பிட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டிகளிலோ சேர்ப்பியுங்கள்.

சுபநேரம்

05-04-1987
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
9-09 முதல் 10-39 வரை
ராகுகாலம்:
4-39 முதல் 6-09 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

பைரூபாமின் (Bairah Farm) ஹைசெக்ஸ் (Hysex) சிவப்பு நிற ஒரு நாள் பேட்டுக்குஞ்சு சேவற்குஞ்சு, ஹைபுறோ (Hybro) புறொய்லர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. நிஷான் இன்ரநஷனல், சட்டநாதர் கோவிலடி, நல்லூர். (1174)

மூன்று தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட பைரூபாமின் ஹைசெக்ஸ் 1 மாத சிவப்பு பேட்டுக் குஞ்சு விஞ்ஞான முறையில் வளர்க்கப்பட்டு உடன் விற்பனைக்குண்டு நிஷான் இன்ரநஷனல் சட்டநாதர் கோவிலடி, நல்லூர். (1174)

(புறொயிலர்ஸ்) இறைச்சிக்கான கோழிகள் விற்பனைக்கு உண்டு கிலோ: ரூபா 40/-, மைக்ரோ, கே. கே. எஸ். வீதி குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். (8824)

வங்கி இடம் மாறுகிறது

நாளை திங்கட்கிழமை முதல் மக்கள் வங்கியின் காங்கேசன்துறைக் கிளை சுன்னாகம் மக்கள் வங்கிக் கிளைக் கட்டடத்தில் இயங்கும். காங்கேசன்துறையில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக வங்கிக் கிளையை இடம் மாற்றம் செய்வதாக வங்கியின் யாழ்பிரதேச முகாமையாளர் திரு.மு. கணேசசுந்தரம் அறிவித்திருக்கிறார். (உ-எ)

மாணவர்களை புத்தகப் பூச்சிகளாக்க பெற்றோர் முயல்கின்றனர்

சாவகச்சேரி, ஏப். 5 மாணவர்களைப் புத்தகப் பூச்சிகளாக்க பெற்றோர் முயல்கின்றனர். பாடசாலை முடிந்ததும் நேராக ரியூட்டரிகளை நாடிச் செல்கின்றனர். இதனால் விளையாட்டு மைதானங்கள் வெறுமையாகக் காட்சி தருகின்றன. வகுப்பறைக் கல்வியுடன் நின்றால் சமூக அனுசரணையான வாழ்வில் இருந்து அவர்கள் விலகிவிட வழி ஏற்படும். சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா இவ்வாறு கூறினார்.

மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ் வித்தியாசாலையின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி விழாவில் அவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அதிபர் திரு. த. அப்புத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மட்டுவில் மகா வித்தியாலய அதிபர் திரு இ. கணேசன், லயன்ஸ் கழகத் தலைவர் திரு. வே. பிலிப் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (இ-31)

டிச. 19 யோசனை அடிப்படையில் பேச்சு நடத்த இஸ்லாமிய குழு கோருகிறது

கொழும்பு, ஏப். 5 டிசம்பர் 19 யோசனைகளின் அடிப்படையில் இலங்கை அரசும்போராளிகள் அமைப்புக்களும் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று இடைக்கால இஸ்லாமிய அரசியல் செயற்குழு வேண்டுகோள் விடுத்து உள்ளது.

செயற் குழுவின் செயலாளர் ஜனாப். எம். ரி எம். [illegible] விடுத்த அறிக்கை ஒன்றில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் இருந்து அம்பாறைத் தொகுதியைப் பிரித்தெடுப்பதற்கு முட்டுக்கட்டையாக முஸ்லிம்கள் நிச்சயம் இருக்க மாட்டார்கள் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

★ ஜெனட்டென்ஸ் ★

உயர்ரக உருக்கு (Steel) தளபாட உற்பத்தியின் முன்னோடிகள்!

புதிய அமைப்பில் உறுதியும் உத்தரவாதமும் கொண்ட

வீட்டு, காரியாலய (Office) தளபாடங்கட்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

ஜெனட்டென்ஸ்

K. K. S. வீதி, இணுவில். (இ)

அவசியமின்றி மருந்துவகைகளை பாவிப்பதால் ஆபத்தான விளைவு

நூல் வெளியீட்டில் நச்சினார்க்கினியன்

யாழ்ப்பாணம், ஏப். 5 'ஆரம்ப சுகாதார சேவையாளர்களுக்கு ஒரு வழிகாட்டி' என்ற நூலில் முப்பது அத்தியாயங்கள் எழுதிய பேராசிரியர் இராமதாஸ் அடுத்த பதிப்பில் மருந்து வகைகளை அவசியமின்றிப் பாவிப்பதையும் அதனால் வரும் ஆபத்தான விளைவுகளையும் எழுத வேண்டும்.

யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு மதிப்பீட்டு உரை நிகழ்த்திய யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் நச்சினார்க்கினியன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருமதி கைலாசபதி நூலின் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

குழந்தைகள் பராமரிப்பு நிதியப் பொறுப்பாளர் இளையர் [illegible] நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

பணிப்பாளர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

2000 ஆம் ஆண்டு உலக மக்கள் அனைவருக்கும் அடிப்படைச் சுகாதார சேவைகள் கிடைக்க வேண்டும் என்ற உலக சுகாதார ஸ்தாபன தீர்மானத்துக்கு இலங்கை ஸ்ரீ லங்கா அரசாங்கமும் ஆரம்ப சுகாதார தொண்டர் மூலம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஆனால் பல்வேறு காரணங்களுக்காக இந்த சேவை தமிழ்ப் பிரதேசங்களில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

18 ரூபாவுக்கு விற்கும் இந்நூலை ஒவ்வொருவரும் வாங்கி கற்றுணர்ந்து செயற்பட வேண்டும்.

அடிப்படை சுகாதார விடயங்களைப் பற்றி சுருக்கமாகவும் தெளிவாகவும் எவரும் விளங்கக் கூடிய வகையில் வெளியிடப் பட்டுள்ளது.

முக்கியமாக சாதாரண சிறுநோய்களுக்கு மருத்துவ முறைகள் பற்றி குறிப்பிடப்பட்டிருப்பது சுகாதார சேவையாளருக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

தமிழ்ப் பகுதிகளில் தற்பொழுது நடைபெறும் நிகழ்ச்சிகளால் பராமரிப்பற்ற அனுதைகளாக வாழும் குடியேற்றப் பகுதித் தமிழர்களுக்கு இக்கை நூல் அருமருந்தாக விளங்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-10)

ஆர்ச்சேஸ் விழா

இளவாலை, ஏப். 5 இளவாலைக் கியூறியாவின் 500 அங்கத்தவர்கள் பண்டத்தரிப்பு புனித பாத்திமாபதியில் கூடி புனித மாசில்லாத மாதாவுக்கு வாக்குத்தத்தத்தைப் புதுப்பித்தனர்.

அருள் திரு. றெஜி ராசஜேஸ்வரன் அருள் உரை வழங்கி பொது ஒப்புக்கொடுத்தலையும் நிறைவேற்றினர்.

ஆன்ம இயக்குநரான அருட் குருக்கள் மைக்கல் ரீ. பற்றிக், சீ. ஜெயக்குமார், பீ. இருதயராஜ் ஆகியோர் சமூகமளித்துச் சிறப்பித்தனர். (இ-48)

பரீட்சை முடிவுகள் தேக்கம்

ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பரீட்சை முடிவுகள் கொழும்பு பரீட்சை திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

பரீட்சார்த்திகள் தமது முகவரியை எழுதுவதில் செய்த தவறே இதற்குக் காரணமாம்.

இதனால் சுமார் 8 ஆயிரத்து 700 பேருக்கான முடிவுகள் அங்கு தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது (உ-7)

தலைமைத்துவ பயிற்சி

வட்டுக்கோட்டை, ஏப் 5 யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவ தலைவர், மாணவ தலைவிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்கான விண்ணப்பங்களை வட்டாரக் கல்வி அதிகாரிகளுக்கூடாக அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை யாழ் கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது (இ-161)

கைதானோர் பற்றி தகவல் இல்லை

திருகோணமலை, ஏப் 5 கடந்த 28 ஆம் திகதி ஆலங்கேணியில் வைத்து பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்ட 14 தமிழர் பற்றி தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

இப்படி கைதானவர்களின் பெற்றோர்கள் பிரசைகள் குழுவினரிடம் இதுபற்றி முறையிட்டுள்ளனர். (உ-எ-150)

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

கல்முனையையும் அரசு யுத்த பிரதேசமாகக் கருதுகிறது; இதனால் எமது அபிவிருத்தியும் தடை

கல்முனை எம்.பி. கவலை

கல்முனை, ஏப் 5 கல்முனைப் பிரதேசம் ஒரு யுத்தப் பிரதேசமாக அரசாங்கத்தால் கணிக்கப்படுகிறது இதனால் தான் நமது பகுதி அபிவிருத்தியில் பாரிய தடைப்பட்டுள்ளது

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன

அதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய கல்முனை எம். பியும், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான ஜனாப் ஏ. ஆர். மன்சூர் மேற்கண்டவாறு கூறினர்.

கல்லூரி அதிபர் திரு. கா. சுப்பிரமணியம் தலைமையில் வைபவம் நடைபெற்றது

ஜனாப். மன்சூர் தொடர்ந்து பேசுகையில்:- 'எமது எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகும் இதனைப் போக்க குறிப்பாக ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும். கல்முனை மாணவ மாணவிகள் விளையாட்டுத் துறையில் சரித்திரம் படைத்தவர்கள் இவர்களுக்கு ஒரு ஸ்ரேடியம் அமைக்க நான் முயற்சி எடுத்தேன் அது முடியாமலிருக்கின்றது. காரணம் கல்முனையை ஒரு யுத்த பிரதேசமாகும் என அரசு கணித்துள்ளது என்றார். (இ-84)

மண்ணெண்ணெய் விநியோகத்துக்கான நடவடிக்கை துரிதம்

யாழ்ப்பாணம், ஏப். 5 குடாநாட்டிலுள்ள தீவுப்பகுதி, கரையோரப் பகுதி, விவசாய நிலங்கள் உள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்குத் தேவையான மண்ணெண்ணெய் தட்டுப்பாடின்றி கிடைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பெற்றோலியக் கூட்டுத்தாபன, வட பிராந்திய முகாமையாளர்கள் இவ்வாறு தெரிவித்தார்.

40க்கும் மேற்பட்ட கூட்டுத்தாபன உத்தரவு பெற்ற விற்பனை முகவர்களுக்கு மண்ணெண்ணெய்க்கான பெர்மிட் வழங்கப் பட்டுள்ளன.

நாளொன்றுக்கு மூன்று முகவர்கள் வீதம் வாரத்துக்கு 15 முகவர்களுக்கு அனுராதபுரத்தில் மண்ணெண்ணெய் வழங்கப் படும்.

ஒரு தடவையில் ஒருவருக்கு 6,600 லீற்றர் வழங்கப்படும்.

தீவுப்பகுதி, கரையோரப் பகுதி விவசாய நிலப் பகுதி முகவர்களுக்கு மண்ணெண்ணெய் கொள்வனவில் அதிக வாய்ப்பு வழங்கப்படும்.

இதனால் இப்பகுதி மக்களின் மேலதிக தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 9 ரூபா 50 சதத்திற்கு விற்கப்படும்.

விற்பனை முகவர்கள் முதலில் கூட்டுத்தாபனத்திடமும், அரச அதிபரிடமும் [illegible] பெற்று இராணுவ முகாமில் பெர்மிட் பெற வேண்டும்.

அதன்பின் 6,600 லீற்றருக்கான பணத்தைக் காசுக் கட்டளையாக கூட்டுத்தாபனத்திடம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு வடபிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (இ-எ)

லீற்றர் ரூபா 9.50

யாழ்ப்பாணம், ஏப் 5 யாழ் மாவட்டத்தில் மண்ணெண்ணெய் 1 லீற்றர் 9 ரூபா 50 சதமாகவும் ஒரு போத்தல் 7 ரூபா 15 சதமாகவும் விற்பனை செய்யப்படும்.

யாழ் மாவட்டத்தில் எரிபொருள் விற்பனைக்கான நிர்ணய விலை யாழ்செயலகத்தில் வெள்ளியன்று நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகளும், அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் முகவர்களும் கலந்து கொண்டனர்.

சுப்பர் பெற்றோல் லீற்றர் 16 ரூபாவாகவும் ஓட்டோ டீசல் லீற்றர் 10 ரூபா 50 சதமாகவும் விற்பனையாகும். (உ-10)

ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5 பேராசிரியர் கைலாசபதியின் 5-ஆவது நினைவு தினம் பற்றிய ஆலோசனைக் கூட்டம் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும். [illegible] தேசியகலை இலக்கியப் [illegible] ஒழுங்கு செய்துள்ளது: (இ-எ)

பரிசளிப்பு விழா

திருநெல்வேலி, ஏப் 5 திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு [illegible] நடைபெற இருக்கிறது. (இ-ரி)

முழங்காவிலில் பலர் இடம்பெயர்வு

முழங்காவில் ஏப் 5 கடந்த சில தினங்களுக்கு முன் முழங்காவிலில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் ஏற்பட்ட மோதல்களை அடுத்து அப்பகுதி மக்கள் யாழ்நகர், கிளிநொச்சி போன்ற இடங்களை நோக்கிச் செல்கின்றனர்.

கடைசியாக நடைபெற்ற மோதலில் இராணுவம் சுட்டதில் கரியாலை நாகபடுவானைச் சேர்ந்த ஒருவர் இறந்துள்ளார், மேலும் சிலர் காயமடைந்துள்ளனர்.

வெள்ளாங்குளம் முகாமிலிருந்து பூநகரி 4 ஆம் கட்டை இராணுவ முகாமை நோக்கிச் செல்லும்போது முழங்காவில் எல்லையில் இம்மோதல்கள் ஏற்பட்டன. (இ-91)

ஆஸ்பத்திரிகளில் கூட பாதுகாப்பு இல்லை

ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்றைய நிலையில் அவசியம்

கரவெட்டி, ஏப் 5 இன்று ஆஸ்பத்திரிகளில் கூட எவ்வித பாதுகாப்பும் கிடையாது. இந்நிலையில் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்கள் மக்களின் குறைகளை அணுகி தடுப்பூசி, முதலுதவி தாய் சேய் போஷாக்கு சூழல்களின் தூய்மை ஆகிய துறைகளில் மக்களுக்கு விளக்க வேண்டும்.

புதுத் தோட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தைத் திறந்து வைக்க உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் நெல்லியடி பிராந்திய பொறுப்பாளர் திரு. மோகன் (மாஸ்டர்) மேற்கண்டவாறு கூறினர்.

திரு. கே. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மோகன் மேலும் பேசுகையில் தற்போது யுத்த விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் நடத்தி வரும் மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு இலக்காகும் மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக கிராமம் தோறும் இவ்வாறான சுகாதார நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றார்.

மேலும் புலிகளின் நெல்லியடி கலாசார பொறுப்பாளர் திரு. செங்கதிர், சுதந்திரப் பறவைகள் அமைப்பின் பிரதிநிதி செல்வி பவானி உட்பட பலரும் உரை நிகழ்த்தினர். (இ-70)

கடற்படைப் படகுகள் மூலம்

ஆயுதம் இறக்கும் முயற்சி முறியடிப்பு

வல்வெட்டித்துறை ஏப் ,5 கடற்படையினர் படகு மூலம் ஆயுதங்களை இறக்கி கரைக்குக் கொண்டுவர எடுத்த முயற்சி தமிழீழ விடுதலைப் புலிகளினால் முறியடிக்கப்பட்டது.

இந்த முயற்சியின் போது ஒரு கடற்படைப் படகு சேதத்திற்குள்ளானது.

கடந்த வியாழன் இச் சம்பவம் இடம் பெற்றது காங்கேசன்துறையில் இருந்து 9 படகுகளில் ஆயுதங்கள் இன்பருட்டிக் கடற்கரையோரமாக வந்தன. அப்போது பெரும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன

தமிழீழ விடுதலைப் புலிகள், கடற்படைப் படகுகளை நோக்கித் தாக்குதல் நடத்தினர் கடற்படைக் கப்பல் திருப்பித் தாக்கியது.

இருந்தும் புலிகளின் தாக்குதலுக்கு சிறிய கடற்படைப் படகுகளினால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

இதனால் கரைக்குவந்த இப் படகுகள் ஆழ் கடலை நோக்கிச் சென்றன. அப்போது ஒரு படகு எரிந்து புகைந்த நிலையில் காணப்பட்டது.

இதனை கரையில் நின்று பொதுமக்கள் பார்க்கக் கூடியதாக இருந்தது (உ-எ-160)

விளையாட்டரங்கு

ஷற்ஜா கிரிக்கெட் போட்டி

பாகிஸ்தானிடம் ஆஸி அணி தோல்வி

ஷார்ஜா, ஏப் 4 நான்கு நாடுகளுக்கிடையில் ஷார்ஜாவில் நடைபெறும் ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் சர்வதேச கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலிய அணியை 6 விக்கெட்டுகளால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணியின் 176 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடிய பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றது.

தனது அணிக்காக 74 ஓட்டங்களைக் குவித்ததோடு ஆஸ்திரேலிய அணியின் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்திய பாகிஸ்தான் வீரர் முடசார் நஸார் ஆட்டத்தின் சிறப்பு வீரராக தெரிவானார். (உ-7)

சென்றலைற்ஸ்வெற்றிக்கேடயம்

மென்பந்து கிரிக்கெட்

25 அணிகள் பங்குகொள்கின்றன

யாழ்ப்பாணம், ஏப். 5 சென்றலைட்ஸ் வெற்றிக் கேடயத்திற்காக யாழ் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 25 விளையாட்டுக் கழக அணிகள் பங்குகொள்கின்றன.

25 அணிகளும் 8 பிரிவுகளாக வகைப்படுத்தப் பட்டுள்ளன.

பிரிவு 'ஏ':- சென்றலைட்ஸ், வளர்மதி, லெவுன் ஸ்ரார்ஸ், சென் ஜோன்ஸ் விளையாட்டுக் கழக அணிகள்.

பிரிவு 'பி':- மல்லாகம் ஆர் டி. எஸ், றலி ஜெற் [illegible] விளையாட்டுக் கழக அணிகள்

பிரிவு 'சி':- சில்வர்ஸ் ரார்ஸ், சென் அன்ரனிஸ் [illegible] விளையாட்டுக் கழக அணிகள்

பிரிவு 'டி':- வைற் கோல்ட் ஸ்ரார்ஸ், ஜடிபன், சரஸ்வதி விளையாட்டுக் கழக அணிகள்

பிரிவு 'ஈ':- கிறீன்லைற் பொற்பதி, கலைவாணி விளையாட்டுக் கழக அணிகள்

பிரிவு 'எவ்':- யாழ்ஸ் சொய்யாத்தோட்டம் கலைஒளி விளையாட்டு கழக அணிகள்

பிரிவு 'ஜி':- புளுபேர்ட் அரியாலை, கராய் விளையாட்டுக் கழக அணிகள்

பிரிவு 'எச்':- இன்டிப்பென்ரன் மல்லாகம் யுத் பட்டபின் விளையாட்டுக் கழக அணிகள்

இந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி 'லீக்' முறையில் நடத்தப்படும். (இ-7)

வயாவிளான் பகுதியில் பாதிக்கப்பட்டோர் நாளை கூடுகின்றார்கள்

யாழ்ப்பாணம், ஏப். 5 வயாவிளான், பலாலி தெற்கு, ஒட்டகப்புலம் பகுதிகளில் வன் செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் நாளை திங்கள் காலை 9 மணிக்கு தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கூடும்படி வேண்டப்படுகின்றனர்.

இவ் வேண்டுதலை வயாவிளான் ஞான வைரவர் சனசமூக நிலையம் விடுத்துள்ளது.

பாதிப்புற்றவர்கள் தங்கள் குடும்ப அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்த இடங்கள் பாதிப்புற்ற விதம், சேத விபரங்கள் ஆகியவற்றை தாமாகவே ஓர் விண்ணப்பப் பத்திரத்தில் எழுதிக் கொண்டு வர வேண்டும் என கேட்கப்படுகின்றார்கள்.

அங்கு சமூகம் தருபவர்கள் முன்னிலையில் வயாவிளான் ஒட்டகப் புலம், பலாலி தெற்கை உள்ளடக்கிய ஒரு பிரசைகள் குழுவும் தெரிவு செய்யப்படும்.

ஏற்கனவே பல விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்தும் இப் பகுதி மக்கள் எந்தவித நிவாரணமும் இது வரை பெறவில்லை.

இவர்களின் பின் பாதிக்கப்பட்ட பல கிராமங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஞானவைரவர் சனசமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (இ-எ)

இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி அன்னம்மா செல்லையா

நீங்கள் மறைந்து இரண்டு ஆண்டுகள் கழிந்தும் எம் உள்ளத்தை விட்டு என்றும் நீங்கள் மறையப்போவதில்லை.

ரட்ணவிலா, மாகியம்பதி. (1173)
உங்கள் பிரிவால் துயருறும் பிள்ளைகள்

உதய சங்கற்பம்

உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்மாக்களை காத்துக்கொள்ளுங்கள்.

—பைபிள்

உதயன்
இல.15,2ஆவதுஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22078
யாழ்ப்பாணம் 5-04-1987 உ.வெ இல. 88

சுவர் இல்லாமல் சித்திரம் தீட்டும் முயற்சியா?

சுவர் இல்லாமல் சித்திரம் தீட்ட முடியுமா? முடியாது என்ற பொதுவான கருத்தை மாற்ற முயற்சிக்கின்றனர் அரசாங்கத்தினரும், அரசாங்க அதிகாரிகளும்!

யாழ்ப்பாணத்தில் டீசல், பெற்றோல் விநியோகம் நடைபெறவில்லை ஆனுல் அவற்றுக்கு நியாயவிலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. என்னே விந்தை; என்னே புதுமை!

வடபகுதி மீதான எரிபொருள் தடையை நீக்க வேண்டும் என்று சர்வதேச நெருக்குதல் இலங்கைக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து தானும் ஏதோ செய்வதாகக் காட்டிக் கொள்வதற்காக, தடையைத் தளர்த்துவதாக அரசாங்கம் அறிவித்தது.

அந்தத் தளர்வு உண்மையிலேயே தளர்ந்து போன விவகாரம் தான்.

பெற்றோலுக்கும், டீசலுக்கும் பங்கீட்டு முறை. அவற்றுக்குரிய பங்கீட்டுப் பத்திரங்கள் இராணுவ முகாம்களில் வைத்து வழங்கப்படும் என்பது அரசின் ஏற்பாடு. வடக்கில் இராணுவ நிர்வாகம் நடக்கிறது என ஊர்ஜிதப்படுத்துவதற்காக அரசாங்கம் வைத்த பொறி அது.

ஆனுல் தமிழ் மக்கள் அந்தப் பொறிக்குள் சிக்கவில்லை. அதனுல் முற்றிலும் புதுவிதமான குழப்பமான ஒரு சூழ்நிலை தோன்றி உள்ளது.

சந்தையில் பெற்றோல், டீசல் என்பன உத்தியோக பூர்வமாக விற்பனையில் இல்லை. கள்ளச் சந்தையில் அதிக விலைகளுக்கு விற்கப்படுகின்றன. தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பெருமளவில் பெற்றோலையும், டீசலையும் தருவித்து வைத்திருக்கிறது. ஆனுல் அதனை வாகனச் சொந்தக்காரர் வாங்குவதற்கு இராணுவ முகாம்களில் மட்டுமே வழங்கப்படும் பங்கீட்டுப் பத்திரம் வேண்டும். எவரும் அங்கு செல்லாமையால் எரிபொருள் இருந்தும் பாவனையாளருக்குக் கிடைக்க முடியாத நிலை. சரக்கு உண்டு வாங்க ஆள் இல்லை என்ற பரிதாபநிலை. ஆனுல் அவற்றுக்கோ பெரும் தட்டுப்பாடு. ஒன்றுக்கு மற்றது நேர் முரணான நிலைமை.

கிடைக்க முடியாத அந்த இரண்டு எரிபொருள்களுக்கும் நியாய விலைகள் வேறு! பாவனையாளர்கள் இலகுவாக எரிபொருளைப் பெற முடியாதிருக்கும்போது அவற்றுக்கு நியாய விலைகள் எதற்காக? இது சுவர் இல்லாமல் சித்திரம் தீட்டும் கெட்டித்தனமா?

எரிபொருள் தடையை அரசாங்கம் ஏன் முற்றாக நீக்கக்கூடாது? அவை மக்களுக்குத் தாராளமாகக் கிடைக்க வசதி செய்தால் என்ன?

தனது தளர்வுத் திட்டம் தோல்வி கண்டு விட்டதே, இனி எவ்வாறு மேலும் தான் தளர்ந்து போக முடியும் என்று அரசு கருதுகிறது போலும்.

அரசாங்கம் தனது தோல்வியை ஒப்புக் கொள்ளப் பின்னிற்கிறதா? அல்லது இராணுவ அடக்குமுறை மூலம் மட்டுமன்றி பொருளாதார நசுக்குதல் மூலமும் தமிழரை வழிக்குக் கொண்டுவர நினைக்கும் தனது உள்நோக்கத்தை நிலைநாட்ட முயற்சிக்கிறதா?

அரசின் நிலை எதுவானுலும் தமிழர்கள் எத்தகைய நசுக்குதலையும் எதிர்த்து நிற்கக் கூடிய மனஉறுதியைப் பெற்று விட்டால் அரசாங்கத்துக்குத் தொடர்ந்து தோல்வியே ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அரசாங்கத்துக்கு ஏற்படும் வெற்றியும், தோல்வியும் தமிழ் மக்களுக்கு உள்ள மனத் தைரியத்திலும் இலட்சியப் பற்றிலுமே தங்கி உள்ளன.

கிளிநொச்சியில் 135 குடும்பங்களுக்கு புனர்வாழ்வு உதவி

யாழ்ப்பாணம், ஏப். 5 கிளிநொச்சியில் கடந்த பெப்ரவரியில் இடம் பெற்ற வன்செயல்களின் போது இடம்பெற்ற 3 ஆயிரத்து 278 குடும்பங்களில் 135 குடும்பங்களுக்கு புனர்வாழ்வுக்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடு கட்டுவதற்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் பொருள்கள் வழங்கப்படும்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் இப்படிக் கிடைக்கும் பொருள்களின் பெறுமதி நாலாயிரம் ரூபா ஆகும்.

இவற்றை கிளிநொச்சி கச்சேரியில் வைத்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

இவ்வுதவிகளைப் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை கிராம வாரியாக வருமாறு:

ஊரியான் 58, உருத்திரபுரம் 14, உமையபுரம் 14, ஜெயந்திநகர் 18, கனகபுரம் 10.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் வேண்டுகோளுக்கு இணங்க அரச அதிபர் திரு. தேவசிகாமணி புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொண்டு எடுத்த முயற்சியின் பயனாக இந்த உதவிகள் கிடைக்கின்றன. (இ-எ-76)

அமெ. உதவி பாகிஸ்தானுக்கு இரட்டிப்பு!

இந்தியாவுக்கு வெட்டு

வாஷிங்டன், ஏப் 4 இந்தியாவுக்கான உதவியை வெட்டுவதற்குத் தீர்மானித்த அமெரிக்க நாடாளுமன்றம், பாகிஸ்தானுக்கான உதவியை இரட்டிப்பாக அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளி விவகார கமிட்டி இத் தீர்மானத்தை எடுத்தது.

இந்தியாவுக்கான உதவியை வெட்டும் தீர்மானம் 18—14 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஒன்றரைக் கோடி டாலரால் இந்திய உதவி குறைக்கப்பட்டது.

இந்திய உதவி குறைக்கப்படுவது குறித்து கமிட்டிக்கூட்டத்தில் காரணம் தெரிவிக்கப்பட்டது.

ரஷ்ய சார்பான வெளி விவகார கொள்கையை இந்தியா கடைப்பிடித்து வருவது குறித்த அதிருப்தி தெரிவிக்குமுகமாகவே அமெரிக்க நாடாளுமன்றம் இந்த நடவடிக்கை எடுத்தது என்று குடியரசுக் கட்சிச் செனட்டர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவின் சுதந்திர வெளி விவகார கொள்கையினுல் அமெரிக்கா சீற்றம் அடைந்திருப்பதையே இந்த உதவி வெட்டு காட்டுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

சீக்கியத் தீவிரவாதிகளுக்கு 20 வருட சிறைத் தண்டனை

ஒட்டாவா, ஏப் 4 பஞ்சாப் அமைச்சர் ஒருவரைக் கொல்ல முயற்சித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வழக்கில் நான்கு சீக்கியத் தீவிரவாதிகளுக்கு தலா 20 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் கொலம்பியா நீதிமன்றம் இத் தண்டனையை விதித்தது.

பஞ்சாப் அமைச்சர் கனடாவில் சுற்றுப்பயணம் செய்த சமயம் இக் கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

''இது ஒரு பயங்கர வாதச் செயலே'' என்று திட்டவட்டமாக தெரிவித்த நீதிபதி, எதிரிகள் ''25 ஆண்டுகளுக்கு ஆயுதங்களைக் கையாளக் கூடாது'' என்றும் உத்தரவிட்டார். (இ-எ)

இத்தாலி பிரான்ஸ் மறுப்பு

ரோம், ஏப் 4 ஐ நா.விதித்த தடையை மீறி தென் ஆபிரிக்காவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்தது என்று அமெரிக்க அரசு விடுத்த குற்றச்சாட்டை இத்தாலியும் பிரான்ஸும் மறுத்துள்ளன. (இ-எ)

ஆண்டுதோறும் 1 கோடி சிறுமிகள் பால்ய விவாகம்!

புதுடில்லி, ஏப்ரல் 4 இந்தியாவில் ஆண்டு தோறும் சுமார் ஒரு கோடி சிறுமிகள் பதினொரு வயது ஆவதற்கு முன்னரே திருமணஞ் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றனர்.

குடும்பக் கட்டுப்பாடு நிறுவனம் நடத்திய ஆய்வு ஒன்றில் இத்தகவல் வெளியானது.

படிப்பறிவற்ற தன்மை காரணமாகவே பால்ய விவாகங்கள் இடம்பெறுகின்றன என்று இந்த ஆய்வு மேலும் தெரிவித்தது. (இ-எ)

வெளி உலகில்

ரஷ்யாவுடன் நல்லுறவு கொள்ள சீனு விருப்பம்

பீகிங், ஏப்ரல் 5 ரஷ்யாவுடன் நல்லுறவுப் பேச்சுக்களை நடத்த சீனு விருப்பம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வளர்த்துக் கொள்ளத் தடையாக உள்ள மூன்று விஷயங்களைப்பற்றி பேச ரஷ்யா ஒத்துக் கொண்டுள்ளதாக சீன வெளி நாட்டு அமைச்சர் பெங் சியேசாங் அறிவித்திருக்கிறார்.

ஆப்கன், கம்பூச்சியா ஆகிய நாடுகளில் முறையே ரஷ்யா, வியட்நாம் துருப்புக்கள் நிலை கொண்டுள்ளமை ரஷ்ய-சீன எல்லையில் ரஷ்யத் துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளமை— ஆகிய விஷயங்கள் குறித்து இரு நாடுகளும் பேச்சுக்கள் நடத்தும்.

ரஷ்யத் தலைவர்களுடன் பேச்சுக்கள் நடத்த சீனக்குழு அடுத்த மாதம் மாஸ்கோ செல்லவுள்ளது.

அரசியல் ரீதியில் பேச்சுக்களில் முன்னேற்றம் காணுவது கஷ்டமாக இருக்கும். ஆனுல், கலாசார, பொருளாதாரத் துறைகளில் உறவுகள் வலுப்பட வாய்ப்பு உண்டு—

இப்படி சீன வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

ரஷ்ய- பிரெஞ்சு உறவுகள் நெருக்கடியில்

மாஸ்கோ, ஏப்.4 மூன்று சோவியத் ராஜதந்திரிகளைபிரான்ஸ் வெளியேற்றியதைத் தொடர்ந்து ரஷ்ய பிரெஞ்சு உறவுகள் நெருக்கடிக் கட்டத்தை அடைந்துள்ளன.

பிரான்சின் செயற்கைக்கோள் பற்றிய, ஆராய்ச்சிகளை, உளவு பார்த்ததாகக் குற்றஞ் சாட்டி மூன்று ராஜதந்திரிகளும் வெளியேற்றப்பட்டனர் என்பது தெரிந்ததே.

இதைத் தொடர்ந்து மத்தியதரைக் கடலில் சென்று கொண்டிருந்த ரஷ்ய சரக்குக் கப்பல் மீது தாழப்பறந்து மிரட்டல் நடவடிக்கையில் மூன்று பிரெஞ்சு விமானங்கள் ஈடுபட்டன என்று ரஷ்யா குற்றஞ் சாட்டி உள்ளது.

இதனிடையில் ராஜதந்திரிகள் வெளியேற்றத்துக்குப் பதிலடி கொடுக்கப்போவதாகவும்ரஷ்யா அறிவித்தது. (இ-எ)

3 கோடி இந்திய ரூபா நஷ்டம்

சென்னை, ஏப்ரல் 4 அரியலூரில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் ரயில் பலத்த சேதமடைந்ததினுல் ரயில்வே பகுதிக்கு ஏற்பட்ட நஷ்டம் சுமார் 3 கோடி இந்திய ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் பற்றிய விசாரணை முடிந்துவிட்டது. அறிக்கை இன்னும் சில தினங்களில் சமர்ப்பிக்கப்படலாம் என்று தெரிகிறது. (இ-எ)

சேவை நீடிப்பு

சென்னை, ஏப்ரல் 4 தமிழ் நாடு பொலிஸ் ஆணையாளர் திரு. கே. ரவீந்திரனின் சேவை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

திரு கே. மோகனதாஸின் இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டார்.

இவரின் சேவை சென்ற மாதத்துடன் முடிவடைய இருந்தது.(இ-எ)

கல்வாரியை நோக்கி சிலுவைப் பயணம்

ரூபன் மரியாம்பிள்ளை

இயேசு காவடுக்க சிலுவையின் பாரத்தோடு நடந்த கல்வாரிப் பாதை ஒரு சாதனைப் பாதை. அந்த சாதனைப் பாதையை நமது சிந்தனைப்பாதை பார்க்க பதினுன்கு நிலைகள் மட்டும் போதாது இருந்தாலும் எம்மனிதப் பெலயீனத்தோடு நாம் எடுக்கும் எந்த ஒரு அடியும் முழுமையான பலனைப் பெருது போகாது.

நிலை ஐந்து - சீமோன் இயேசுவுக்கு உதவுகிறார்.

சீமோன்கள் பலர் இருப்பதால் தான் நம்மில் பலர் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள். உதவியைத் தேடி அகதிகளாகவும் ஆறுதல் அற்றவர்களாகவும், அவஸ்தைப்படுகிறவர்களாகவும் பலர் நம் நடுவே இருக்கிறார்கள்.

அவர்களில் சிலருக்கு உதவி செய்யும் நல்ல உள்ளங்கள் இருப்பதால் தான் பலர் இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

எமது இரண்டு கைகளையும் எப்போதும் இரண்டு பக்கங்களிலும் நீட்டிக் கொண்டிருப்போம். ஆபத்திலும் அழிவிலும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு நாம் உதவி செய்து வாழ்வதால் எம் மக்கள் அனைவர் மேலும் ஆண்டவனின் அன்புக்கரம் உதவிக்காக எப்போதும் நீண்டிருக்கச் செய்வோம்.

நிலை ஆறு- வரோணிக்காள் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறுள்.

எம் மக்களின் அழுகைக் கண்ணீரைத் துடைத்து அவலங்களைக் குறைத்து அமைதியான வாழ்வு வாழ அழிவுகளின் மத்தியிலும் உறுதியான வாழ்வு வாழ எம்மை அர்ப்பணித்து நாம் செய்யும் செயல் என்ன?

'யாருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் இறைவனாகலாம். உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்களாகலாம்'— இது ஒரு கவிஞனின் வார்த்தைகள்.

எமது பூமியில் தியாக உணர்வுகள் வளர்ந்து உள்ளன. அர்ப்பணிக்கும் நிலை உயர்ந்து உள்ளது. அவற்றின் மத்தியிலும் அழிவுகளும் அவலக் குரல்களும் அதிகம் கேட்கத் தொடங்கி உள்ளன. இவற்றின் மத்தியில் எம் சிறிய தியாகம் என்ன?

நிலை ஏழு- இயேசு இரண்டாம் முறை விழுகிறார்.

நமது தரையில் நாம் விழும்போது ஏற்கனவே விழுந்தவர்களையும் அவர்களின் உயிர் ஊசலாட்டங்களையும், இரத்தத் துளிகளையும் கண்ணீர் மழைகளையும் காண்கிறோம். நாம் அவர்களை இன்னும் ஆழமாகத் தள்ளி விடக்கூடாது என்று பார்ப்போம்.

ஞானக்கதிர்

வீழ்ந்தவர்கள் புதுப் பலத்துடன் மீண்டும் எழுந்திருக்க வேண்டும் எழுந்த பின் மீண்டும் விழுந்து விடாமல் கவனமாக இருக்க வேண்டும். வீழ்ந்தவர்களை நொந்தவர்களை நாம் மீண்டும் விழுத்தாது விடுவதுடன் எழுந்து வாழவும் வழி செய்வோம்.

நிலை எட்டு- அழுகின்ற பெண்களுக்கு ஆறுதல் சொல்கிறார் இயேசு.

எனக்காக அழாதீர்கள். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.

இன்று எம்மிலும் அழுவோர் தான் அதிகமாக இருக்கிறார்கள். இவர்களிடமும் இயேசு இன்றும் எனக்காக அழாதீர்கள். உங்களுக்காக அழுங்கள் என்றுதான் சொல்லுவார்.

மனச்சாட்சியை விற்றுவிட்ட குற்றத்திற்காக, தான்தோன்றித்தனமாக சுயநலப் போக்கில் செயல்படத் தொடங்கிவிட்டமைக்காக, அடுத்தவன் அழிவில் அடுக்குமாடி கட்ட நினைத்தமைக்காக - இவைக்கு மட்டும்தானு?

அநியாயமாகத் தாக்கப்பட்டு, குண்டுகளினுல் அடிக்கப்பட்டு, அன்றுட உணவிற்கு வழியற்று இப்படி இன்னும் பல வகைகளில் இன்றைய பிரச்சினைகளால் அவதிப்படுவோரை அயலவர் என்று ஏற்றுக்கொள்ளாமைக்கு அழுங்கள். கண்ணீர் சிந்தி அழுங்கள். நன்றாக அழுங்கள். உங்கள் கண்ணீர் இந்தப் பூமியை புனிதமாக்கட்டும்.

நிலை ஒன்பது- இயேசு மூன்றாம் முறை விழுகிறார்.

நாம் விழும்போது வீழ்ந்தவர்களை இன்னும் வீழ்த்தி விடாமல் அவர்கள் எழுந்துவாழ எழுப்பி விட வேண்டுமெனக் கண்டோம். நமது வீழ்ச்சிகள் ஒவ்வொன்றும் எழுச்சியின் அடிக்கற்களாகட்டும்.

நாம் வீழ்ந்திருக்கும் ஒவ்வொரு [illegible] வீழ்ச்சிகளில் இருந்து [illegible] வேண்டும். எம் வாழ்வின் (4 ஆம் பக்கம் பார்க்க)



பொய்யாமொழி

குறள்:

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ துறைவது அறிவு

பொருள்:

உலகம் எவ்வாறு நடைபெறுகின்றதோ, உலகத்தோடு பொருந்திய வகையில் தானும் அவ்வாறே நடப்பதே அறிவாகும்.

தொழில் நுட்பக் கல்வியின் அவசியம் குறித்து மாணவர் உணராதது வேதனை தருகிறது

வட்டுக்கோட்டை, ஏப் 5 மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வியின் அவசியம் பற்றி இன்றும் உணராதிருப்பது பெரும் வேதனைக்குரியதாகும்.

ஆசிரியர்கள் தொழில் நுட்பக் கல்வியைப் பற்றி மாணவர் உணர்ந்து கொள்ளும் வகையில் உதாரணங்களுடன் போதிக்க வேண்டும்.

வட்டுக்கோட்டை வட்டார அதிபர்கள் சங்கக் கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்திய யாழ் மாவட்டத் தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு. சு. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினுர்.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா தலைமையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இக் கூட்டம் நடைபெற்றது.

தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு. சு. சுப்பிரமணியம் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

இவ்வாண்டை தொழில் நுட்பக் கல்வி அபிவிருத்தி ஆண்டாக அரசு பிரகடனப்படுத்தி உள்ளது.

இந்த ஆண்டில் தொழில் நுட்பம் சம்பந்தமான கண்காட்சிகள் சகல பாடசாலைகளிலும் நடத்தப்பட வேண்டும்- மாணவர்கள் கண்காட்சிகளைப் பார்ப்பதன் மூலம் தொழில் கல்வியின் அவசியத்தை உணர்ந்து கொள்வார்கள்.

தொழில் நுட்பக் கல்வியின் சிறப்பினை உணராத மாணவர்கள் பலர் பட்டம் பெற்றுவிட்டு அதன் மூலம் வாழமுடியாது கஷ்டப்படுவதை நாம் காண்கின்றோம்.

சமூக வாழ்வுக்கேற்ற பூரண மனிதனுக்குவதே கல்வியின் முக்கிய நோக்கமாகும். கல்வி சமூக வழிப்படுத்தல், தனி ஆற்றல் விருத்திக்கு உதவவேண்டும். எதிர்காலத்திற்கு மாத்திரமன்றி வாழும்போதும் உடனுக்குடன் பொருளாதாரத்திற்கு உதவக் கூடியதாக கல்வி அமைய வேண்டும்.

இப்படி அவர் கூறினுர். (இ-161)

ஒத்திவைப்பு

காங்கேசன்துறை, ஏப். 5 கொல்லங்கலட்டி சைவத்தமிழ் கலவன் பாடசாலை நிறுவுனர் நினைவுநாளும், பரிசளிப்பு விழாவும் பின்போடப்பட்டுள்ளன.

இப்பகுதியில் தொடரும் வன்செயல்கள் காரணமாக இவ்விழா பின்போடப்பட்டுள்ளதாக அதிபர் திரு வே. தனபாலசிங்கம் அறிவித்துள்ளார். (இ-68)

மலேசியா, சிங்கப்பூர் ஓய்வூதியக் கொடுப்பனவு செயலகத்தில் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 5 யாழ் கோட்டையில் உள்ள இலங்கை வங்கி கச்சேரிக் கிளை மூலம் மலேசியா, சிங்கப்பூர் ஓய்வூதியம் பெறுபவர்களது மார்ச் மாதத்துக்கான கொடுப்பனவு, காசோலை மூலமாக எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ் செயலகத்தில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலை காரணமாக இலங்கை வங்கியின் கோட்டை அலுவலகம் மூலம் ஓய்வூதியம் வழங்குவது சாத்தியமற்றது. ஆகையால் ஓய்வூதியர்கள் ஏதாவது ஒரு வங்கியில் சேமிப்புக் கணக்கையோ நடைமுறைக் கணக்கையோ ஆரம்பித்து அதன் மூலம் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

காசோலையை நேரில் பெற வரும் பொழுது தமது தேசிய அடையாள அட்டை, ஓய்வூதிய அட்டை ஆகியவற்றுடன் தாம் ஆரம்பித்துள்ள வங்கிக் கணக்கு இலக்கம், வங்கியின் பெயர் ஓய்வூதியக்காரர் பெயர், முகவரி ஓய்வூதிய இலக்கம் ஆகியன குறித்து எழுதப்பட்ட கடிதத்தையும் தவறாது சமர்ப்பிக்க வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (உ-10)

சமய சந்நிதிகளில்

முத்துமாரி அம்பாள் ஆலயத்தில்

வட்டுக்கோட்டை ஏப். 5 வட்டுக்கோட்டை வீயோடை முத்துமாரி அம்பாள் வருடாந்த அலங்காரத் திருவிழா இம்மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

11 ஆம் திகதி சனிக்கிழமை வரை திருவிழாக்கள் தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். (இ-161)

"TOEFL"
Weekend Classes
Duration -- 3 Months
Full Fees 250/- only
Commencement; 11-04-1987
Lectures by Popular English Lecturer
Mr. Kandiah Navarendran
Cantabia Institute
21, Main Street, Jaffna, Phone: 24201
13, Rasavinthodam Lane, Jaffna.

உதயன்
05 04-1987 ஞாயிற்றுக்கிழமை

COMPUTER PROGRAMMING
BASIC LANGUAGE
6 Months - Weekends
Commencement 25-4-1987
Fees: Rs. 1500/-
JOIN THE LEADERS
Cantabia Institute
21, Main Street, Jaffna. Phone: 24201
13, Rasavinthodam Lane, Jaffna.

காங்கேசன் - மாவிட்டபுரப் பகுதிகள் வெறிச்சோடிக் கிடக்கின்றன

காங்கேசன்துறை, ஏப் 5

காங்கேசன்துறை, மாவிட்டபுரம் பகுதிகள் யுத்தப்பிரதேசம் போன்று மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

கடந்த சில தினங்களாக இப்பகுதியில் இடம்பெறும் மோதல்கள் ஷெல் தாக்குதல்கள் ஹெலித் தாக்குதல்கள் காரணமாக இப்பகுதியிலிருந்த ஏராளமானோர் வீடுகளைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இப்பகுதி வீதிகள் எங்கும் ஒரே சூனியமாகக் காணப்படுகின்றன. வீதியால் செல்லும் வாகனங்களை ஹெலி துரத்திச் சென்று துப்பாக்கிப்பிரயோகம் செய்கிறது.

கடந்த முதலாம் திகதி சிமெந்து ஆலைக்கு குத்தகைக்கு சேவையிலீடுபடும் சிறிய தனியார் வான் ஒன்று காங்கேசன்துறை கல்லூரி வீதியில் வைத்தும், மாவிட்டபுரம் சந்திக்கருகில் வைத்தும் ஹெலித் தாக்குதலுக்கு இலக்காகி பலத்த சேதமடைந்தது.

பிரயாணிகள் மினி பஸ்ஸொன்றும் ஹெலித்தாக்குதலில் சேதமடைந்தது. வீடுகளின் ஓடுகள், கூரைகள் சேதமடைந்துள்ளன.

மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் பிரயோகம் நடைபெறுவதால் மக்கள் இடம்பெயர்ந்து வருகிறார்கள்.

இப்பகுதிகளில் மக்கள் வீடுகளில் இல்லாததால் அவர்களுக்கு வரும் தபால்கள் விநியோகிக்கப்படாமல் தபால் நிலையங்களில் தேங்கிக் கிடக்கின்றன.

எந்த நேரம் என்ன நடக்குமோ என்று மக்கள் அச்சமடைந்துள்ளனர். (இ-86)

தாக்குதலின் பலனை

ஒரு நாள் அனுபவிக்க நேரிடும்

வல்வை பிரசைகள் குழு தலைவர் ஜனாதிபதிக்கு கடிதம்

வல்வெட்டித்துறை, ஏப் 5

அப்பாவித்தமிழர் மீது நடத்தப்படும் காட்டுமிராண்டித் தனமான தாக்குதலுக்குப் பொறுப்பானவர்கள் அதற்கான பலனை ஒரு நாள் அனுபவிப்பர்.

வல்வை பிரசைகள் குழுத் தலைவர் திரு கே. இ. திருநாவுக்கரசு ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் வல்வையில் அப்பாவி மக்கள் மீது ஆயுதபடையினர் நடத்திய அரக்கத்தனமான தாக்குதல் பற்றி திரு. திருநாவுக்கரசு தனது கடிதத்தில் விவரித்திருக்கிறார்.

மற்றவரின் துன்பத்திலே இன்பம் காணும் நபர் தான் இப்படியான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களுக்குப் பொறுப்பாக இருப்பர் என்று அஞ்சுகின்றேன். ஒழுங்கான ஒருவன் இப்படியான செயல் பற்றி கனவு கூட காணமாட்டான்.

இப்படியான செயல்களுக்கு பொறுப்பானவர் இதற்கு பதில் சொல்லியே ஆகவேண்டும்.

இந்தக் காட்டுமிராண்டித் தனமான செயல்களுக்கு நீங்கள் பங்காளராக இருக்க மாட்டீர்கள் என்று நான் நம்புகின்றேன்.

இது விஷயத்தில் உங்கள் உதவியை நான் நாடவில்லை. நாட்டின் தலைவர் என்ற முறையில் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக இதனை எழுதுகின்றேன் - இப்படி ஜனாதிபதிக்கு திரு. திருநாவுக்கரசு தெரிவித்திருக்கிறார். (இ-எ-160)

வித்தாரம்

என்ன! எப்பிடி தம்பி முரளி!!

ஒரு கிழமைக்குமேலாய் உம்மைச் சந்திக்க முடியயில்லை.

எங்கே சந்தோருக்கு வெளிக்கிடுற நேரம் பார்த்து ஹெலிவரும் அல்லது பொம்மர் வரும் அல்லாட்டால் கோட்டையிலிருந்து ஷெல் வரும்.

சந்தோரை விட்டு வெளிக்கிடுற நேரம் பார்த்தும் ஏதோ ஒரு பக்கத்தாலை ஒரு வெடிச்சத்தம் கேட்கும்.

ரோட்டிலை போகயிக்கையும் அதே நிலைதான், அதாலை உம்மை வந்து சந்திக்கிறதுக்கு மனம் வரயில்லை.

நீ வந்த நேரங்களிலை நானும் வீட்டிலை இல்லை.

இந்த எட்டுப் பத்து நாளையிலை எத்தினை சம்பவங்கள், புதினங்கள்! எல்லாம் நீயும் அறிஞ்சுதானே இருப்பாய்.

இரண்டுகிழமைக்கிழமையள் அடுத்தடுத்து யாழ்ப்பாண நகரம் பெரும் செய்திக்கு உரிய இடமாய் வந்திட்டுது. முதல் 8 யுத்தக் கைதிகள் சிறைபிடிப்புச் சம்பவம். அடுத்தது எட்டு நோயாளர் ஆஸ்பத்திரியிலை ஷெல்லடியிலை செத்தது.

குடாநாடு முழுவதும் நடந்திற அநியாயப் படுகொலைகள் போதாது என்டு மேலும் ஆயுதம் ஆயுதமாய், படைபடையாய்க் கொண்டுவந்து குவிக்கினம்.

இந்தியா யார்? உலக நாடுகள் யார்? எவை என்டாலும் சொல்லுறதைச் சொல்லட்டும்; நாங்கள் செய்யிறதைச் செய்வோம் என்டபோக்கிலை உத்தமரும் அவரின் அபிமான சிஷ்யன் அச்சாணியாரும் போய்க்கொண்டிருக்கினம்.

இந்தியாவும் தூது அனுப்பிறதும், பேசிறதுமாய் பேந்தும் பேந்தும் காலத்தை இழுக்க இழுக்க, இவை இஞ்சாலை தமிழற்றை எண்ணிக்கையை இழுத்துக்குறைக்கினம்?

இதிலை பெரிய பகிடி என்ன தெரியுமே. தமிழ்ப் பகுதிகளிலை பொதுமக்கள் சாகிற விஷயங்கள் தனக்கு உடனுக்கு உடனே தெரிய வாறயில்லை என்டு பெரிய தலைவர் ஒருவர் பெரும் கவலையோடு (உள்ளுக்கை சந்தோஷமாய்) சொல்லி இருக்கிறார்.

தெரிஞ்சாப்போலை தான் ஏதோ சொல்லித்திப்பாட்டிப்போடுவார் என்ட தொனியிலை கதைக்கிறார்.

பாதுகாப்புக்கு அந்தளவு அதிக செலவு செய்து ஏன் சொந்த நாட்டு மக்களை கொண்டுகுவிக்கவேணும் என்டு கேட்கிற ஷெல்டன் ரணராஜா போன்றவையும் தென்னிலங்கையிலை சஞ்சிகைகள் பலதும் போட்டமாதிரி இருக்கத்தான் செய்யினம்.

புலியள் பிடிச்சு வைச்சிருக்கிற யுத்தக் கைதியளை மீட்கிறதுக்கு அப்பிடியான இரண்டொரு பேரை அரசாங்கம் அனுப்பினால் என்ன, போர்நிலைமை ஒருமாதிரிக் குறைக்க ஏலாதோ என்டு ஒருவர் கேட்டார்.

அவர் அச்சாணியார் யுத்தக் கைதியளை மீட்க தான் ஏதோ மந்திர வித்தை வைச்சிருப்பதாய்ச் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

அந்த எட்டுப்பேற்றை பெற்றோர், உற்றோர் தவிச்சு குமுறிய பிறகு தான் அச்சாணியாற்றை மந்திர வித்தை தெரிய வரும்போலை.

இனப்பிரச்சினை விஷயத்திலை ஆளும்கட்சியிலையும் பெரிய கருத்துவேற்றுமையாம்.

இந்தச் சனியனைத் தீர்த்துத் துலைக்கிட வேணும் என்டதிலை ஒரு இளைய மந்திரி கொஞ்சம் அக்கறையாம். அவற்றை அப்பர் பெரும் தலைவருக்கு ஆலோசகராகவும் இருந்தவர். இளையவரோடை மையத்திலை முந்திச் சத்தம் போட்ட நடுவயதுக்காரரும் இப்ப சப்போட்டாய் நிக்கிறார் என்டு கேள்வி. நிதானமாய்ப் பேசிவந்த இரண்டு மந்திரிமார் இப்ப தப்புத் தாளம் போடுகினம். உப்பிடிக் காலத்துக்குக் காலம் அவை ஆள்மாறி ஆள் கன்னை பிரியிறதே ஒழிய பிரச்சினை தீர்ந்தபாடாயில்லை.

சிறிமாவும் அதுக்குள்ளை 'கலரிக்கு பிளே' பண்ணத் தொடங்கி இருக்கிறா. இனப் பிரச்சினை தன்னாலைதான் தீரும் என்டு அடிக்கடி சொல்லுறா. டிக்ஸிற்றும் ஜே. ஆரைச் சந்திச்சுப் பேசிற நேரமெல்லாம் அவவையும் கண்டு பேசிறார்.

தமிழற்றை பிரச்சினை உப்பிடி உலையிலை அரசியல் சீட்டாட்டமாய்ப்போச்சு. அதுக்கு முடிவுகட்டினால் தான் தமிழனுக்கு விடிவு.

ஆனந்த விகடன் ஆசிரியருக்கு 3 மாதச் சிறை

சென்னை, ஏப் 5

'ஆனந்த விகடன்' ஆசிரியருக்கு மூன்று மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் திரு. பி. எச் பாண்டியன், சட்டசபைக் கூட்டத்தில் இது சம்பந்தமான தீர்ப்பை நேற்று வழங்கினார்.

எம். எல் ஏக்கள், அமைச்சர்கள் ஆகியோரை அவமதிக்கும் விதத்தில் 'ஆனந்தவிகடன்' வார சஞ்சிகையில் கேலிச் சித்திரம் ஒன்றை பிரசுரித்தமை தொடர்பாக இத்தண்டனை வழங்கப்பட்டது.

இக்கேலிச் சித்திரத்தை பிரசுரித்தமைக்காக மன்னிப்புக் கோரும் அறிக்கை ஒன்றை ஆனந்த விகடனில் பிரசுரிக்கும் படி முன்னர் தமிழ்நாடு சபாநாயகர் உத்தரவிட்டிருந்தார்.

அமைச்சர்கள், எம் எல் ஏக்களை அவமதிக்கும் எண்ணத்தோடு அந்தக் கேலிச் சித்திரம் பிரசுரிக்கப்படவில்லை என்று ஆனந்த விகடன் ஆசிரியர் விளக்கம் அனுப்பியிருந்தார்.

அந்த விளக்கத்தைச் சட்டசபை ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆசிரியரின் விளக்கம் பற்றி சபை விவாதித்த பின்னர், அவரைத் தண்டிக்க வேண்டும் என்ற பிரேரணையை சபை முதல்வர் திரு. இரா நெடுஞ்செழியன் கொண்டு வந்தார்.

வாய்மூல வாக்கெடுப்பில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அதற்கு பின்னர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

ஆனந்த விகடன் ஆசிரியர் திரு எஸ். பாலசுப்பிரமணியத்தைக் கைது செய்து மூன்று மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படவேண்டும் என்று சபாநாயகர் பாண்டியன் தீர்ப்பு அளித்தார்.

திரு. பாலசுப்பிரமணியம், ஜெமினி ஸ்டூடியோ அதிபராக இருந்து மறைந்த திரு. எஸ். எஸ். வாசனின் புதல்வர்.

ஆனந்த விகடன் ஸ்தாபக ஆசிரியராகவும் திரு. வாசனே இருந்தார்.

தமிழ் நாட்டின் பழம்பெரும் வார சஞ்சிகைகளில் ஒன்று 'ஆனந்த விகடன்' என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

இயன்ஸ்மித் நாடாளுமன்றம் செல்லத் தடை

ஹராரே, ஏப்ரல்4

ஸிம்பாப்வேயின் முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சி உறுப்பினருமான திரு. இயன் ஸ்மித் ஸிம்பாவே நாடாளுமன்றத்திற்கு செல்வதற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

இத்தடை ஒருவருடத்திற்கு செல்லுபடியாகும்.

தென்னாபிரிக்கா மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட வேண்டும் என இயன் ஸ்மித் கோரியதையடுத்தே நாடாளுமன்றத்திலிருந்து நீக்கப்பட்டார். (இ-எ)

தாய்மகள்..,

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

களின் விவரங்கள் வருமாறு;

1, நல்லதம்பி இராமச்சந்திரன், வயது 28, கெருடாவில்.

2. ச. இராசகுமார், வயது 17, வல்வை.

3 எஸ். நளினம். வயது 17, வல்வை.

பீரங்கித் தாக்குதலினால் வல்வைச் சந்தியில் உள்ள ஒரு கடையில் உள்ள சாமான்கள் அனைத்தும் எரிந்தன. திருவில் குடியேற்ற வீடுகள் சில நேற்று மாலை எரிந்துகொண்டு இருந்தன.

கரையோரப்பகுதி மக்கள் பெருமளவில் மண்டான், துன்னாலை, இமையாணன், நெல்லியடி போன்ற இடங்களுக்கு குடிபெயர்ந்து சென்று கோயில்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்களில் தஞ்சமடைந்திருக்கின்றனர் (இ-எ-160

சர்வதேச...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டுதற்குரியவை.

ஆனால் கொழும்பு அரசின் அடக்கு முறை நடவடிக்கைகள் இந்திய முயற்சிகள் பலனளிப்பதை கஷ்டமாக்கி வருகின்றன-இப்படி அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

4 முகாம்..,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய ஷெல் தாக்குதலில் பனைகள் முறிந்து விழுந்தன சில ஷெல்கள் வெடிக்காத நிலையில் மண்ணுக்குள் புதையுண்டன. அவை தோண்டி எடுக்கப்பட்டு புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன,

சில ஷெல்கள் [illegible] இராமம் போன்ற பனை வெளிகளில் வீழ்ந்து வெடித்தன. இதனால் பொதுமக்கள் சிலர் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

வல்வையில்

வல்வை முகாம்களில் இருந்து ஐந்நூறு வரையிலான சிப்பாய்கள் ஹெலிக் கொப்டர்களின் ஆகாயப் பாதுகாப்புடன் வெளியேற முயற்சித்தனர்.

விடுதலைப் புலிகள் சுமார் இரண்டு மணித்தியாலம் நடத்திய கடும் தாக்குதலின் பின்னர் சிப்பாய்கள் முகாம் திரும்பினர். பின்னர் அங்கிருந்து பயங்கர ஷெல் தாக்குதல்களை அவர்கள் மேற்கொண்டனர்.

பலாலி, வயாவிளான்

பலாலி, வயாவிளான் முகாம்களில் இருந்தும் இராணுவம் கிழக்குப் பக்கமாக வெளியேறி பொதுமக்கள் வாழும் பகுதிக்குள் பிரவேசிக்க முயன்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய எதிர்த் தாக்குதலைத் தொடர்ந்து ராணுவம் முகாம் திரும்பியது.

அதன் பின்னர் அப்பகுதியில் ஹெலிக்கொப்டர் தாக்குதல் சுமார் இரண்டரை மணித்தியாலங்களுக்கு மேல் நீடித்தது.

இத்தாக்குதலில் ஒரு சிறுமியும் பெண்ணும் படுகாயமடைந்தனர். சிறுமி ஆபத்தான நிலையில் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (இ-எ-11-160)

பல்கலைக்கழக மாணவர்கள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, ஏப் 5

ருகுணு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 86 மாணவர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக கொழும்பு, களனி பல்கலைக் கழக மாணவர்களில் ஒரு பிரிவினர் பகிஷ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பகிஷ்கரிப்பு இடம் பெற்றது. (இ-எ)

நாச்சிக்குடா சந்தி வரை வந்த இராணுவம்

முழங்காவில், ஏப் 5

நேற்று முன் தினம் (வெள்ளிக்கிழமை) வெள்ளாங்குளம் முகாமிலிருந்து புறப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நாச்சிக்குடா சந்தி வரை முன்னேறியுள்ளதாக அப்பகுதியிலிருந்து வெளியேறிய மக்கள் தெரிவிக்கின்றனர்.

இராணுவ முன்னேற்றத்தால் சங்குப்பிட்டி-மன்னார் போக்குவரத்து கடந்த சில தினங்களாக முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

பல்லவராயன் கட்டு, ஜெயபுரம் மக்கள் பயத்தின் காரணமாக வேறு இடங்களில் தஞ்சம் அடைகின்றனர். (இ-91)

முத்தமிழ் மன்ற விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

கொழும்புத்துறை புனிதவளனார் குருமடத்தில் இன்று ஞாயிறு காலை முதல் மாலைவரை முத்தமிழ் மன்றவிழா நடைபெறும்.

காலை நிகழ்ச்சிகளாக "ஏணிப்படிகள்" கையெழுத்துப் பத்திரிகை வெளியீட்டு விழாவும், கம்பன்கழகம் திரு. இ. ஜெயராஜ், புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோரது சொற்பொழிவுகளும் இடம் பெறும்.

பிற்பகலில் யாழ். ஆயுர்வேதக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் இராஜேந்திரம் சொற்பொழிவாற்றுவார்.

அதைத் தொடர்ந்து நாடகப்போட்டி நடைபெறும். (இ-எ)

ஹரியானாவில் தேர்தல் நடத்த கோரிக்கை

புதுடில்லி, ஏப்.4

ஹரியானா மாநில சட்டசபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

இப்படி எதிர்க்கட்சித் தலைவர்கள் தலைமைத் தேர்தல் ஆணையாளரை நேரில் சந்தித்துக் கேட்டுக் கொண்டனர்.

ஜனதா, லோக்தள், பாரதிய ஜனதா ஆகிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் இக்கோரிக்கையை விடுத்தனர்.

இந்தியா---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ளர்.

எதிர்காலப் பேச்சுக்களின்போது தமிழரைப் பலவீன நிலையில் வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே இலங்கை அரசு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

எரிபொருள் தடையில் தளர்வு என்று சொல்லியும் யாழ் குடாவில் அது அமுலுக்கு வரவில்லை.

இலங்கை அரசுடன் தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்திய பேச்சுக்களின்போது ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டது. அந்த முன்னேற்றத்தைக்கூட இல்லாமற் செய்யும் முயற்சியில் தற்சமயம் இலங்கை அரசு ஈடுபட்டு வருகிறது.

எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இந்தியா சுயேச்சையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்— இப்படி திரு. அமிர்தலிங்கம் பிரதமர் காந்திக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டிருக்கின்றார். (இ-எ)

இந்து நாளிதழுக்கு-----

(1- ஆம்பக்கத் தொடர்ச்சி)

நாளிதழுக்கு விருது வழங்க முடிவுசெய்யப்பட்டது''- என்று சொன்னார்.

'இந்து'வின் சார்பில் இணையாசிரியர் திரு. என். ராம், விருதைப் பெற்றுக்கொண்டார்.

இலங்கை இனப்பிரச்சினை குறித்து 'இந்து'வின் நிலைப்பாட்டை திரு. ராம் விளக்கினார்.

கல்கி சார்பில் அதன் ஆசிரியர் திரு கி இராஜேந்திரன் விருதைப் பெற்றுக்கொண்டார்.

மகாராஷ்டிர ஆளுநர் திரு. சங்கர் தயாள் சர்மா விருதுகளை வழங்கினார்

'தினமலர்' ஆசிரியர் ஆர். கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரை கூறினார். மைலாப்பூர் அக்கடமி இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்தது (இ-எ)

கல்வாரி. . . .

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

நிலைகளால் துன்பத்தில் வாழமுடியாத சூழ்நிலைகளில் வீழ்ந்திருப்போர் நம்பிக்கைகளை இழந்தவர்கள் புதிய வாழ்வு வாழ அவர்களைத் தாம் ஏற்றுக் கொள்வோம்,

நிலை பத்து- இயேசுவின் ஆடைகள் உரியப்படுகின்றன.

ஒருவருடைய ஆடைகளைப் பலவந்தமாகப் பிடுங்கிப் பறித்து இம்சைப்படுத்துவதுதான் ஒருவருக்கு செய்யக் கூடிய மிகக்கொடிய செயலாகும்.

மனிதனை மதிப்போடு வாழவைப்பதும் மிருகங்களில் இருந்து பிரித்து வைப்பதும் ஆடைகள் தான்.

ஆடைகளைப் பெறமுடியாதவர்களும் அவற்றை இழந்தவர்களும் எம்மிடையே இருக்கும் போது நேர்த்திக்கொரு ஆடை போடும் ஆடைப்பிரியர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.

ஆடைகள் களையப் பட்டு அவமானப்படுத்தப்படுவோரும் சித்திரவதை செய்யப்படுவோரும் மன உறுதிகளைப் பெற்றுக் கொள்ளவும் தொடர்ந்து வாழவும் வரம் வேண்டுவோம்.

(அடுத்த ஞாயிறு

மக்கள்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

டனர். இதை நிறுத்த புலிகள் பதில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்

புலிகளின் தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காயம் அடைந்து இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது

இராணுவத்தினரின் தாக்குதலின் போது புதுவிதமான ஹெலிக்கொப்டர் தாழப் பறந்து வட்டமிட்டதாயினும் தாக்குதல் எதையும் நடத்தவில்லை.

பயணிகளைக் கொண்டு செல்லும் விமானம் ஒன்றும் இராணுவம் தாக்குதல் நடத்திய சமயத்தில் நிலைகளைத் தாழப் பறந்து கண்காணித்த வண்ணம் வயாவிளானை நோக்கிச் சென்றது


வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு
1987
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜொ லிஸ்ரார்ஸ் னியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரரை வாசகர்கள் தெரிவு செய்யும் போட்டி
வீரரின் பெயர்
கல்லூரி
வாக்காளர் பெயர்
விலாசம்
ஒப்பம்

ஷகி சலூன்
லேடீஸ் அன் ஜென்ஸ்!
உங்கள் பாதுகாப்புக் கருதி
மீண்டும் இடம் மாற்றம்
596/2, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
★ ஏற்கனவே கொட்டடியிலும், சிவன் கோவிலடியிலும் இயங்கியது உங்களுக்குத் தெரிந்ததே.
(1175) ஏ. ஜி. டாஸ்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15, ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி 05-04-1987 தொலைபேசி இல. 24805, 22073

Printed and Published by Uthayan Publications (Private) Ltd,
15, Second Lane Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office Under Number QL/ 94 / N/87 Telephone. 24305, 22073